ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2025/19 - 2017 ජුනි මස 27 වැනි අඟහරුවාදා - 2017.06.27

2025/19 ஆம் இலக்கம் - 2017 ஆம் ஆண்டு யூன் மாதம் 27 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி III - காணிகள்

### காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

**1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தற் (திருத்தச்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

கோவை இல.: GAL/LAN/ AQUIS/ A13/19.
காணி அமைச்சின் இல.: 4-3/9/2013/WS/377.

ஒரு பகிரங்கத் தேவைக்கு வேண்டியதான கீழ்க் காணும் காணியை எடுத்துக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார்கள் என்பதை 1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தல் (திருத்தச்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் (1) ஆம் உப பிரிவின் பிரகாரம் நான் இத்தால் அறிவிக்கின் றேன்.

**எடுத்துக் கொள்ளவிருக்கும் காணியின் விபரம்:**

சப்பிரகமுவ மாகாணம், கேகாலை மாவட்டம், கலிகமுவ பிரதேச செயலாளர் பிரிவில், பெலிகல் கோரளையின் கிழக்கு சிறு பிரிவில், வேரகொட கிராமத்தில் அமைந்துள்ள நில அளவையாளர் நாயகத்தினால் தயாரிக்கப்பட்ட அடிப்படை வரைபடம் கே 3545 மற்றும் 2017.05.30 ஆந் திகதிய வரைபடத்தின் அடிப்படையில் முழு விஸ்தீரணம் 0.0569 ஹெக்டயார் கொண்ட காணித் துண்டாகும்.

**1. துண்டு இலக்கம் 1**

காணியின் பெயர்: நான்கொடஹேன அல்லது கங்கொடஹேன; உரிமை கோருபவர்: ஆர். எம். டீ. பீ. ரணதுங்க, ஹத்னாகொட, பெலிவத்த, பெலிகல; விஸ்தீரணம்: 0.0569 ஹெக்டயார்.

மேற்குறித்த காணிக்கு உரித்துப் பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்தில் அதிகாரமளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2017 ஆம் ஆண்டு யூலை மாதம் 19 ஆந் திகதி மு. ப. 10.00 மணிக்கு கலிகமுவ பிரதேச செயலகத்தில் என்முன்பாக வெளிப்படுத்தும்படியும்,

மேலும், அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான நட்டஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும், நட்டஈட்டுத் தொகையையும் அத்தொகை கணிக்கப்பட்ட விபரங்களையும் 2017 ஆம் ஆண்டு யூலை மாதம் 12 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் இரு பிரதிகளாக எனக்கு அறிவிக்கும்படியும் இத்தால் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

கே. ஜீ. எஸ். நிசாந்த,
பிரதேச செயலாளர்,
கலிகமுவ.

பிரதேச செயலகம்,
கலிகமுவ,
2017, யூன் 22.

7 - 331



*இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*